தாராபுரத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 'ரோடு ஷோ'!



சத்தியத்தின் பாதையிலிருந்து ஒருபோதும் விலகாத மகாத்மா!

காந்தியடிகளின் வாழ்வைப் படிப்போம்! அவரிடமிருந்து கற்போம்!

காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 4 -

காந்தியடிகளின் பிறந்தநாளை யொட்டி (அக். 2) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், "காந்தியடிக ளின் வாழ்வைப் படிப்போம்! அவரி டமிருந்து கற்போம்" என்று புகழா ரம் சூட்டியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப் பதாவது: -

My life is my message: சத்தியத் தின் பாதையில் இருந்து ஒருபோ தும் விலகாத மகாத்மா காந்தி அவர்களின் பிறந்தநாள்.

இந்தியா, இங்கிலாந்து, தென் னாப்பிரிக்கா என அவர் வாழ்க் கையில் பெற்ற ஒவ்வொரு அனுப வத்தையும் கொண்டு தொடர்ந்து தன்னைச் செதுக்கிக் கொண்டவர் காந்தியடிகள்.

தொடர்ந்து சமூகத்தோடு உரையாடினார். தொடர்ந்து தன் னையும் தன் கருத்துகளையும் மாறுபாட்டுக்கு உட்படுத்திக் கொண்டே வந்தார். ஆனால், உண்மையாக இருந்தார்.

அதனால்தான், 'என் வாழ்க்



கையே நான் விட்டுச் செல்லும் செய்தி' என அவரால் கூற முடிந் தது.

அவரது பெருமையைப் போற் றும் வகையில், நமது #Dravidian Model ஆட்சியில் எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் அவ ரது திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தேன், மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தைப் பழமை மாறாமல் புதுப்பித்தோம், உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருதுகளை மீண்டும் வழங்கத் தொடங்கினோம்.

காந்தியடிகளின் வாழ்வைப் படிப்போம்! அவரிடம் இருந்து கற் போம்! மதநல்லிணக்கம் போற் றும் இந்தியாவைக் காப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ளார்.



தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள் தொடர்பாக திமுக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டிஆர்பி ராஜா தலைமையில் அக்டோபர் 3 அன்று தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ காணொலி வாயிலாக பங்கேற்றார். சமூக வலைத்தளப் பணிகளிலும், நேரடியாக வாக்கு சேகரிக்கும் பணிகளிலும் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து விரிவான ஆலோசனைகளை அணிச்செயலாளர் வழங்கினார். ஆளுங்கட்சியின் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக கழக வழக்கறிஞர்களுடன் இணைந்து செயல்படுவது குறித்து சட்டத்துறைச் செயலாளர் விளக்கினார். தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். காணொலி வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

M.L.A. Shopping-ல் மும்முரமாக இருக்கும் முதலமைச்சர்!

த.வெ.க. ஆட்சி Waste ஆட்சி என மக்கள் முடிவு!

தாராபுரத்தில் மளிகைக் கடையில் விலைவாசி பற்றி கேட்டறிந்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!

சென்னை, அக். 4 -

"த.வெ.க. ஆட்சி வேலைக்கு ஆகாத Waste ஆட்சி என மக்கள் முடிவெடுத்து விட்டனர்" என்று கழ கத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாராபுரத்தில் பரப்புரைக் கிடையே மளிகைக் கடையில் விலைவாசி உயர்வு குறித்து கேட் டறிந்த பின் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் விமர்சித்து பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டி ருப்பதாவது:-

MLA Shoppingஇல் மும்முர மாக இருக்கும் முதலமைச் சருக்கு, மக்கள் மளிகைக் கடையில் கூட shopping செய்ய முடியாமல் கஷ்டத்தில் தவிப்பது தெரியுமா?

தாராபுரத்தில் பரப்புரைக்கு இடையே மளிகைக் கடை ஒன் றில் விலைவாசி உயர்வு குறித்து கேட்டேன். 4 மாதம் முன்பிருந்த விலையில் இருந்து அத்தியாவசி யப் பொருட்களின் விலை பெரு மளவுக்கு உயர்ந்துள்ளது.

அன்றாடச் சமையலுக்கே வீடுகள்விழிபிதுங்கிநிற்கின்றன. ரீல்ஸ் பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா?

இந்தியா முழுவதும் பொரு ளாதார வளர்ச்சி இறங்குமுகத் தில் இருந்தபோது கூட, #DravidianModel ஆட்சியில் தமிழ்நாடு ஏறுமுகத்தில் இருந் தது.

ஆனால் இன்றைய நிலை



என்ன?

இந்தியா முழுவதும் GST வரு வாய் உயர்ந்த நிலையில் கூட, கடந்த மூன்று மாதங்களாகத் தமிழ்நாடு சரிவைச் சந்தித்து வருகிறது.

இந்த ஆட்சி வேலைக்கு ஆகாத Waste ஆட்சி என முடி வெடுத்து, தமிழ்நாடு அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமை யான Guidance TNஇல் இருந் தும் அனுபவமிக்க வல்லுநர்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்வ தாகச் செய்திகள் வருகின்றன.

பொருளாதாரம், விலைவாசி, மின்சாரம், தொழில்துறை, சட்டம் ஒழுங்கு, மருத்துவம், பால்வளம் என எல்லாவற்றிலும் தமிழ்நாடு வீழ்ச்சியை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக் கிறது.

இவற்றில் கவனம் செலுத்தா மல், விளக்குமாத்துக்குப் பட்டுக் குஞ்சம் என்பது போல எல்லா வற்றிலும் 'வெற்றி' என Sticker ஒட்டினால் போதும் என நினைக் கும் அரசிடம் மாட்டிக்கொண்டு மக்கள் தவிக்கின்றனர்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ளார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவாக கொளத்துப்பாளையம் பேரூர், கரையூரில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.